# மனித வள மேலாண்மைத் துறை

## மானியக் கோரிக்கை எண். 35

## அறிவிப்புகள்
## 2021–2022

# மனித வள மேலாண்மைத் துறை

## மானியக் கோரிக்கை எண். 35

அறிவிப்புகள்
2021 – 2022


**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**
நிதி மற்றும் மனித வள
மேலாண்மைத் துறை அமைச்சர்

# மனித வள மேலாண்மைத் துறை
# 2021 - 2022 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்

## 1. போட்டித் தேர்வுகளில் தமிழ்மொழி பாடத்தாள் கட்டாயமாக்கப்படுதல்.

தமிழக அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்கள் மற்றும் மாநில பொதுத் துறை நிறுவனங்களில் உள்ள பணியிடங்கள் அனைத்திலும், தமிழக இளைஞர்களை 100 சதவீதம் நியமனம் செய்யும் பொருட்டு, தேர்வு முகமைகளால் நடத்தப்படும் அனைத்து போட்டித் தேர்வுகளிலும் தமிழ்மொழி பாடத் தாள் தகுதித் தேர்வாக கட்டாயமாக்கப்படும்.

## 2. வேலை வாய்ப்பில் முன்னுரிமை

வேலை வாய்ப்பகங்கள் வழியாக நிரப்பப்படுகின்ற அரசுப் பணியிடங்களில் பின்வரும் இனத்தவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்:

(i) கொரோனா தொற்றால் பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள்

(ii) முதல் தலைமுறை பட்டதாரிகள்

(iii) தமிழக அரசுப் பள்ளிகளில் தமிழ்மொழியில் பயின்ற நபர்கள்



## 3. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் புலனாய்வுகளை கூர்மைப்படுத்திட மென்பொருள் மற்றும் வல்லுநர்களின் சேவை.

ரூ.1.10 கோடி (ரூபாய் ஒரு கோடியே பத்து இலட்சம் மட்டும்) செலவில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்கக வழக்கு விசாரணைகளில், இணையவழி வங்கி சேவையின் வாயிலான பணப்பரிமாற்றம் மற்றும் தரவுகளின் பகுப்பாய்விற்காக மென்பொருள் நிறுவுவதுடன் நிபுணத்துவம் பெற்ற பட்டயக் கணக்கர், இணையதள குற்ற தடயவியல் நிபுணர், ஓய்வு பெற்ற வங்கி அலுவலர்கள் மற்றும் ஓய்வு பெற்ற வருமான வரி ஆய்வாளர் / அலுவலர்கள் ஆகியோரின் சேவைகளும் பயன்படுத்தப்படும்.

## 4. புதியதாக தோற்றுவிக்கப்பட்ட 6 வருவாய் மாவட்டங்களில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகங்கள் ஏற்படுத்துதல்.

புதியதாக தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, ராணிப்பேட்டை, தென்காசி மற்றும் திருப்பத்தூர் ஆகிய வருவாய் மாவட்டங்களில் ரூ.2.93 கோடி (ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சம் மட்டும்) செலவில் ஆறு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகங்கள் ஏற்படுத்தப்படும்.



## 5. கொரோனா பெருந்தொற்று காரணமாக வயது உச்ச வரம்பு உயர்த்துதல்.

கொரோனா பெருந்தொற்று காரணமாக, பணியாளர் தெரிவு முகமைகளால் (Recruiting Agencies) நடத்தப்படும் அரசு பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் தாமதமானதால், நேரடி நியமன வயது உச்ச வரம்பு இரண்டு ஆண்டுகளாக உயர்த்தப்படும்.

## 6. அரசுப் பணி நியமனங்களில் பெண்களுக்கான ஒதுக்கீட்டினை 40 சதவீதமாக உயர்த்துதல்.

மாற்றத்தை ஊக்குவிப்பதில் பாலின சமத்துவம் முக்கியமானது என்பதை உணர்ந்து, நேரடி நியமனம் மூலம் மேற்கொள்ளப்படும் அரசுப் பணி நியமனங்களில் பெண்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ஒதுக்கீடு 30 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக உயர்த்தப்படும். இதற்குரிய சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படும்.



## 7. தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் ஆய்வு நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

தலைமைச் செயலக ஆய்வுக் குழுக்கள் மற்றும் மாவட்ட ஆய்வுக் குழுக்களால் மேற்கொள்ளப்படும் திடீர் ஆய்வுகள் மற்றும் விரிவான ஆய்வுகளின் உரிய பலன்களை உடனுக்குடன் பெறுவதற்காக ஆய்வுப் பிரிவிற்கு ரூ.15 லட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) செலவில் மடிக்கணினிகள் மற்றும் அதனை சார்ந்த மென்பொருட்கள் வழங்கப்படும்.

## 8. அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு மிகு மின்சாரம் வழங்குதல்

மாநிலத்தின் முதன்மை பயிற்சி நிறுவனமான அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு சீரான மின்சாரம் பெறப்படுவதை உறுதி செய்ய 500 KVA திறன் கொண்ட ஸ்விட்ச் கியர் அமைப்புடன் இரு மின்மாற்றிகள் ரூ. 4 கோடி (ரூபாய் நான்கு கோடி மட்டும்) செலவில் அமைக்கப்படும்.



## 9. அண்ணா மேலாண்மை நிலைய பணியாளர்களுக்கான வாடகை குடியிருப்புகள்:

அண்ணா மேலாண்மை நிலையத்தில் 2005-ஆம் ஆண்டில் பணியாளர்களுக்காக ஆறு வாடகை குடியிருப்புகள் கட்டப்பட்டன. தற்போது கூடுதல் பணியாளர்களுக்காக அண்ணா மேலாண்மை நிலைய வளாகத்திலேயே ரூ.3.50 கோடி (ரூபாய் மூன்று கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் கூடுதல் பணியாளர் வாடகை குடியிருப்பு அமைக்கப்படும்.

## 10. 53 வயதை கடந்த தொகுதி 'அ' மற்றும் 'ஆ' அலுவலர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி

'அ' மற்றும் 'ஆ' பிரிவு அரசுப் பணியாளர்களில் 53 வயதுக்கு உட்பட்ட வர்களுக்கே பிரத்யேகமாக பயிற்சி நடத்தப்படுகிறது. இதற்கு மாறாக, 53 வயதை கடந்த அலுவலர்களுக்கு பொதுவான தலைப்புகளான மனித வள மேலாண்மை, நேர மேலாண்மை, தலைமைப் பண்புகள் மற்றும் பொதுமக்கள் நல்லுறவு போன்ற பிரிவுகளில் அவர்களின் வயது மற்றும் பணி முதிர்ச்சி ஆகியவற்றை கருத்தில் கொண்டு வகுப்பறை அல்லா சூழலில் நடத்துவதற்கு கூடுதலாக ரூ. 2 கோடி (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும்.



## 11. அண்ணா மேலாண்மை நிலையத்தில் சிறப்பு பயிற்சி அளித்தல்

மாநில அரசு பணியில் உள்ள இடைநிலை ஆசிரியர்கள் முதல் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் வரை குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள், சத்துணவுப் பணியாளர்கள், அரசு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் பணிபுரியும் அரசு விடுதிக் காப்பாளர்கள் மற்றும் முறையான பயிற்சி பெறாத அனைத்து துறை பணியாளர்களுக்கும் அண்ணா மேலாண்மை நிலையத்தில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். இதற்காக ரூ. 2 கோடி (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) ஒதுக்கீடு செய்யப்படும்.

## 12. காட்சி ஊடகப்பாதை - படப்பிடிப்பு தளம் அமைத்தல்.

அண்ணா மேலாண்மை நிலையத்தின் AIM TN காட்சி ஊடகப்பாதை செயல்பாட்டினை மேம்படுத்தும் வகையில் ரூ. 50 லட்சம் (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் பிரத்யேகமாக ஒரு படப்பிடிப்புத் தளம் (Studio) அமைக்கப்படும் மற்றும் அதற்கான அனைத்து உபகரணங்களும் வாங்கப்படும்.



## 13. இரண்டு புதிய மினி பேருந்துகள் வாங்குதல்.

முதன்மை பயிற்சி நிறுவனமான அண்ணா மேலாண்மை நிலையத்தில் மாநில / மத்திய அரசு மற்றும் பொதுத்துறை நிறுவன அலுவலர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பல்வேறு இடங்களிலிருந்து வரும் பயிற்சியாளர்கள் அண்ணா மேலாண்மை நிலையத்தை வந்தடையவும், அங்கிருந்து பயிற்சி தொடர்பாக தலைமைச் செயலகம் உள்ளிட்ட பல இடங்களுக்கு செல்லவும், பயிற்சியாளர்களின் போக்குவரத்து வசதிக்காக ரூ.40 லட்சம் (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) செலவில் 2 புதிய மினி பேருந்துகள் வாங்கப்படும்.

## 14. புதிதாக கணினி / உபகரணங்கள் வாங்குதல்.

அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம் மற்றும் 'அ' (ம) 'ஆ' பிரிவு அடிப்படை பயிற்சி நிலையத்தில் கணினி ஆய்வகத்தினை புதுப்பிக்கும் பொருட்டு ரூ.81 இலட்சம் (ரூபாய் எண்பத்தியொரு இலட்சம் மட்டும்) செலவில் கணினிகள், அச்சுப்பொறி மற்றும் உபகரணங்கள் வாங்கப்படும்.

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**
**நிதி மற்றும் மனித வள**
**மேலாண்மைத் துறை அமைச்சர்**